

விருதுநகர் வடக்கு மாவட்டம் திமுக மாணவரணி சார்பில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் விருதுநகரில் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் நிதி மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பேசினார். கழக பேச்சாளர்கள் புதுக்கோட்டை விஜயா, நெல்லை முத்தையா ஆகியோர் பேசினார்கள். இந்த நிகழ்ச்சியில் நகர செயலாளர் எஸ்.ஆர்.எஸ். தனபாலன், செயற்குழு உறுப்பினர் சுப்பாராஜா, செயற்குழு உறுப்பினர் எம்.ஏ.சந்திரன் , மாவட்ட அவைத் தலைவர் தங்கராஜ், ஒன்றிய செயலாளர் பொன்னுத்தம்பி, மாநில வர்த்தக அணி வனராஜா, சிவகாசி மேயர் சங்கீதா இன்பம், விளையாட்டு மேம்பாட்டு அணி கே.ஜி. ராஜகுரு, மாநகரச் செயலாளர் உதயசூரியன், பகுதி செயலாளர் சிவகாசி காளி ராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.பி.மதியழகன், எஸ்.சுதாகர், வர்த்தக அணி ஜெயச்சந்திரன், தங்க தமிழ்வாணன், ஒன்றிய செயலாளர்கள் மந்திரிஓடை கண்ணன், சந்தான பாண்டியன், நகர துணைச் செயலாளர் ஏ.எஸ்.கே.ரமேஷ் குமார், விவசாய அணி நேஷனல் ராமர், அவைத் தலைவர் காசிராஜன் இலக்கிய அணி வை மலைராஜன் ஆகியோர் பங்கேற்றனர். கூட்டத்திற்கான ஏற்பாட்டை வடக்கு மாவட்ட திமுக மாணவர் அணி அமைப்பாளர் கருப்பு ராஜா துணை, அமைப்பாளர்கள் பாலமுருகன், தெய்வநாயகம், ரவிவர்மா, திவாகர் , உதயசூர்யா ஆகியோர் செய்திருந்தனர்.



கோவை கிணத்துக்கடவு அண்ணா திடலில் கோவை தெற்கு மாவட்ட திமுக மற்றும் மாநகர் தெற்கு மாவட்ட திமுக மாணவரணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் கிணத்துக்கடவு பேரூர் கழக செயலாளர் கனகராஜ் தலைமையில் தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரபு வரவேற்புரையில் நடைபெற்றது. கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் – கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன், முன்னாள் மத்திய அமைச்சர் கண்ணப்பன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, தலைமைக் கழக பேச்சாளர் சேப்பாக்கம் பிரபாகரன் ஆகியோர் வீரவணக்க நாள் சிறப்புரையாற்றினர். மேலும் கதிர்வேல், செந்தில்குமார், பூரண சந்திரன், அரவிந்த், வசந்த், ராம், புனிதவதி, தண்டாயுதபாணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

## தமிழ்நாடு முழுவதும்

# பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டம் - 88 சதவீதம் நிறைவு!

## கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

*சென்னை, ஜன.28*

முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு துவக்கி வைக்கப்பட்ட பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டம் தமிழ்நாடு முழுவதும் 25.01.2025 வரை 88 சதவீதம் நிறைவு பெற்றுள்ளது என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.



“தமிழர்களின் பழம்பெரும் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் பிரதிபலிக்கும் விழாவாகப் பொங்கல் பண்டிகை தமிழ்நாட்டில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்நாள் அறுவடைத் திருவிழாவாகவும், இயற்கைக்கும், உழவர் பெருங்குடி மக்களுக்கும் அவர் தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாகவும் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது.

2025-ஆம் ஆண்டு தைப்பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுக்கரும்பு வழங்கப்படும்” எனவும், பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படவுள்ள இலவச வேட்டி-சேலைகள் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் சேர்த்து வழங்கப்படும் எனவும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

அதன்படி, கடந்த 09.01.2025 அன்று சென்னை, திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் சின்னமலை வேளச்சேரி பிரதான சாலையில் இயங்கிவரும் சைதாப்பேட்டை - 11 நியாய விலைக்கடையில் முதலமைச்சர் அவர்கள் அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கி அந்தத் திட்டத்தினைத் துவக்கி வைத்தார்.

இதன் மூலம், தமிழ்நாடு முழுவதும் 34,793 நியாயவிலைக்கடைகளில் 2 கோடியே 20 லட்சத்து 94 ஆயிரத்து 585 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

இதற்காக சுமார் 50,000 கூட்டுறவுத்துறை பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசு வழங்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது.

அதன்படி, 25.01.2025 வரை தமிழ்நாடு முழுவதும் 1 கோடியே 94 லட்சத்து 15 ஆயிரத்து 346 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது என கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.








